## இனிமையான குழந்தைகளே! உங்களுடைய மனம் என்ற கண்ணாடியில் உள்ளுக்குள் ஏதேனும் பூதம் இல்லையே? என பாருங்கள். பூதங்களை விரட்டுவதற்கு முயற்சி செய்துக் கொண்டே இருங்கள்.

கேள்வி: சங்கமத்தில் பாபா மற்றும் குழந்தைகளுக்கு இடையில் உலகத்தில் இருந்து முற்றிலும் தனிப்பட்ட பழக்கம் இருக்கிறது, அது என்ன?

பதில்: உலகத்தில் குழந்தைகள் தந்தைக்கு நமஸ்காரம் செய்கிறார்கள். ஆனால் இங்கே தந்தை குழந்தைகளுக்கு நமஸ்காரம் செய்கின்றார். இனிமையான குழந்தைகளே! நான் உங்களுடைய சேவையில் தயாராக இருக்கிறேன். எனவே குழந்தைகளாகிய நீங்கள் என்னைக் காட்டிலும் பெரியவர்கள் ஆகிவிட்டீர்கள்! என்று தந்தையே கூறுகின்றார். இரண்டாவது நான் நிர் அகங்காரி, நிராகாரி தந்தை என்றால் நிச்சயமாக நான் முதலில் நமஸ்காரம் செய்வேன். இது சங்கமத்தின் தனிப்பட்ட பழக்கம் ஆகும்.

ஓம் சாந்தி. வருவதற்கு முன்பாக பாபா குழந்தைகளுக்கு நமஸ்காரம் செய்ய வேண்டுமா அல்லது குழந்தைகள் பாபாவிற்கு நமஸ்காரம் செய்வதா? (குழந்தைகள் தந்தைக்குச் செய்ய வேண்டும்) இல்லை. முதலில் பாபா நமஸ்காரம் செய்ய வேண்டும். சங்கமயுகத்தின் பழக்க வழக்கங்கள் அனைத்திலிருந்தும் தனிப்பட்டதாகும். நான் அனைவருக்கும் தந்தை என்று பாபாவே கூறுகின்றார். உங்களுடைய சேவையில் வந்து ஆஜராகியிருக் கிறேன் என்றால் நிச்சயம் குழந்தைகள் பெரியவர்கள் ஆகிவிட்டர்கள் அல்லவா? உலகத்திலோ குழந்தைகள் தந்தைக்கு நமஸ்காரம் செய்கிறார்கள். இங்கேயோ தந்தை குழந்தைகளுக்கு நமஸ்காரம் செய்கின்றார். நிராகாரி, நிர் அகங்காரி என்று பாடப்பட்டிருக்கிறது என்றால், அதை காண்பிக்க வேண்டும் அல்லவா? அவர்கள் சன்னியாசிகளின் காலடியில் வணங்குகிறார்கள். சரணங்களை முத்தமிடுகிறார்கள். ஆனால் எதையும் புரிந்துக் கொள்ளவில்லை. பாபா கல்பத்திற்குப் பிறகு குழந்தைகளைச் சந்திப்பதற்காக வருகிறார். நீங்கள் மிகவும் செல்லமான குழந்தைகள். ஆகவே, இனிமையான குழந்தைகளே நீங்கள் களைத்து விட்டீர்கள் என கூறுகிறார். திரௌபதியின் காலைப் பிடித்து விட்டார் என்றால், வேலைக்காரன் ஆகிவிட்டார் அல்லவா? வந்தே மாதரம் என்று யார் கூறியது. பாபா முழு உலகத் திற்கும் எல்லையற்ற சேவை செய்வதற்காக வந்திருக்கிறார் என குழந்தைகள் புரிந்துக் கொள்கிறீர் கள். சிருஷ்டியில் எவ்வளவு குப்பை இருக்கிறது. இது நரகம் ஆகும். எனவே நரகத்தை சொர்க்கமாக மாற்ற பாபா வர வேண்டியிருக்கிறது. மனப்பூர்வமாக வருகிறார். நான் குழந்தைகளின் சேவையில் வர வேண்டும் என அறிகிறீர்கள். கல்ப கல்பமாக சேவையில் ஈடுபட்டு இருக்கிறேன். இங்கே அமர்ந்துக் கொண்டே அனைவருக்கும் சேவை ஆகிவிடுகிறது. அனைவரிடமும் போக வேண்டும் என்பது கிடையாது. முழு உலகத்திற்கும் நன்மை செய்யக் கூடிய வள்ளல் ஒருவர் அல்லவா! அவருடன் ஒப்பிடும் போது வேறு எந்த மனிதரும் சேவை செய்ய முடியாது. அவருடையது எல்லையற்ற சேவையாகும்.

பாடல் : விழித்தெழுங்கள் மணப்பெண்களே! விழித்தெழுங்கள்...

எவ்வளவு நல்ல பாடல். புதிய யுகத்தைப் பற்றி புரிய வைக்க வேண்டும். யுகம் கூட பாரத வாசிகளுக்கு தான். சத்யுகம் திரேதாயுகம் முடிந்து விட்டது என்று பாரத வாசிகளிடம் அவர்கள் கேட்கிறார்கள். ஏனென்றால் அவர்கள் வருவதே துவாபர யுகத்தில் தான். எனவே பாரதம் பழமை யான கண்டம். அதில் தேவதைகள் இராஜ்யம் செய்தனர் என்று மற்றவர்களிடம் கேட்கிறார்கள். ஆதி சனாதன தேவி தேவதா தர்மம் இருந்தது. அது இப்போது இல்லை. கீதை தான் தேவி தேவதா தர்மத்தின் தாய் தந்தை. மற்ற அனைவரும் பின்னால் வருகிறார்கள். எனவே இது மற்ற தர்மங்களை விட பழமையாகி விட்டது. உண்மையில் ஒரு கீதை தான் முக்கியமானது, அதை அனைவரும் ஏற்றுக் கொள்ள வேண்டும். ஆனால் எங்கே ஏற்றுக் கொள்கிறார்கள். அவர்கள் தங்களின் தர்ம சாஸ்திரங்களைத் தான் ஏற்கிறார்கள். பகவான் எப்போது கீதையைக் கூறினார் என்று கூட தெரியவில்லை. கீதை தான் பாபாவால் கூறப்பட்டது. அதில் தந்தைக்குப் பதிலாக குழந்தையின் பெயரை போட்டு குழப்பி விட்டனர். ஆகவே, சிவராத்திரி எப்போது கொண்டாடுவது என தெரியவில்லை. சிவஜெயந்திக்கு பிறகு கிருஷ்ண ஜெயந்தி ஆகும். ஒரு போதும் ஸ்ரீகிருஷ்ணரின் யக்ஞம் என பாடப்படவில்லை. ருத்ர ஞான யக்ஞம் என்று தான் பாடப் பட்டிருக்கிறது. அதிலிருந்து தான் வினாச ஜுவாலைகள் சுடர் விட்டு எரியும். அதை உண்மையில் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். ஆதி சனாதன தேவி தேவதா தர்மம் மீண்டும் உருவாகிக் கொண்டிருக்கிறது. பிறகு இந்த அனைத்து தர்மங்களும் (மதங்கள்) இருக்காது. எப்போது மற்ற தர்மங்கள் எதுவும் இருக்காதோ அப்போது தான் கிருஷ்ணரும் வந்தார். மற்ற ஆத்மாக்கள் அனைத்தும் முக்தி தாமத்தில் இருக்கின்றன. அனைவரும் பகவானை சந்திக்க வேண்டும் அல்லவா? அனைவரும் பாபாவிற்கு சலாம் செய்வார்கள். பிறகு பாபாவும் வந்து குழந்தைகளுக்கு சலாம் செய்கின்றார். பிறகு குழந்தைகள் பாபாவிற்கு செய்கிறார்கள். இச்சமயம் பாபா சாகாரத்தில் வந்துள்ளார். இங்கே அனைத்து ஆத்மாக்களும் பாபாவைச் சந்திக்க முடியாது. ஏனென்றால் கோடியில் ஒரு சிலர் தான் வருவார்கள். அப்படியானால் அனைத்து பக்தர்களும் எப்போது எங்கே சந்திப்பார்கள்? எங்கிருந்து பகவானை விட்டு பிரிந்தார்களோ அங்கே தான் சென்று சந்திப்பார்கள். பகவானின் இருப்பிடமே பரந்தாமம் ஆகும். எல்லா குழந்தைகளையும் துக்கத்திலிருந்து விடுவித்து பரந்தாமத்திற்கு அழைத்துச் செல்கிறேன் என்று பாபா கூறுகின்றார். இந்த வேலை அவருடையதாகும். அழுக்கான உலகத்தை தூய்மையாக மாற்ற பாபா வர வேண்டியிருக்கிறது. சொர்க்கத்தின் இறை தந்தை என்றால் நிச்சயமாக சொர்க்கத்தை படைப்பார் அல்லவா? நரகத்தினை இராவணனும், சொர்க்கத்தினை பாபாவும் ஸ்தாபனை செய்கின்றனர். இவருடைய சரியான பெயர் சிவன், பிந்து ஆவார். ஆத்மாவும் பிந்து தான்! புருவ மத்தியில் இவ்வளவு தான் இருக்க முடியும். ஆத்மா எப்படி இருக்கிறதோ அப்படியே பரமாத்மாவும் இருக்கிறார். ஆனால் அதிசயம் என்னவென்றால், இவ்வளவு சிறிய ஆத்மாவில் 84 பிறவிகளின் நடிப்பு நிரம்பி இருக்கிறது. அது ஒரு போதும் அழிவதில்லை. காலாகாலத்திற்கும் இருந்துக் கொண்டே இருக்கிறது. இவை எவ்வளவு ஆழமான விஷயங்களாகும்.

இப்போது மனிதர்கள் அமைதியை கேட்கிறார்கள். ஏனென்றால், அனைவரும் அமைதியில் (சாந்திதாமம்) செல்லக் கூடியவர்கள். சுகம் காகத்தின் எச்சிலுக்கு சமம் என்று கூறுகிறார்கள். இப்போது கீதையிலோ இராஜ யோகத்தின் மூலமாக

இராஜாக்களுக்கு இராஜாவாக மாற வேண்டும் என்று இருக்கிறது. அப்படி எனில், சுகத்தை காகத்தின் எச்சிலுக்கு சமம் என்று நினைப்பவர்களுக்கு இராஜ்ஜியம் எப்படி கிடைக்கும்? இது இல்லற மார்க்கத்தின் விஷயம் ஆகும். இல்லறத்தில் இருந்துக் கொண்டே நீங்கள் தாமரை மலருக்குச் சமமாக தூய்மையாக மாற வேண்டும். சன்னியாசி களுக்கு இந்த வேலை இல்லை. இல்லை என்றால், அவர்கள் ஏன் வீடு வாசலைத் துறக்க வேண்டும். நீங்கள் தானத்தை முதலில் தன் வீட்டிலிருந்து தான் ஆரம்பிக்க வேண்டும் என கூறு கிறீர்கள். நான் முதலில் இவருக்குத் தான்(சாகார பிரம்மா) புரிய வைக்கிறேன் என பாபா கூறுகிறார். இது சிவபாபாவின் சைத்தன்ய வீடாகும். முதன் முதலில் இவர் (பிரம்மா) கற்கின்றார். பிறகு அவரிடம் தத்தெடுக்கபட்ட குழந்தைகள் வரிசைக் கிரமத்தில் கற்றுக் கொண்டிருக்கிறார்கள். இது மிகவும் ஆழமான விஷயம் ஆகும். சத்கதி வழங்கும் வள்ளல் பதீத பாவனரே வந்து இந்த இரகசியங்கள் அனைத்தையும் புரிய வைக்கின்றார். அங்கிருந்தே தூண்டுவார் என்பதெல்லாம் கிடையாது. அவர் இங்கே வருகின்றார். சிவனின் பல கோயில்கள் நினைவுச் சின்னங்களாக இருக்கின்றன. நான் சாதாரண பிரம்மாவின் உடலில் வருகிறேன் என்று அவரே கூறுகின்றார். இவர் தமது பிறவிகளைப் பற்றியும் அறியவில்லை. இதில் ஒருவரின் விஷயம் மட்டும் அல்ல. அனைத்து பிரம்மா வாய் வழி வம்சத்தினரும் அமர்ந்திருக்கின்றனர். பிரம்மாவின் வாய் மூலமாக பிராமணர்களாகிய நீங்கள் படைக்கப்பட்டிருக்கிறீர்கள். பிராமணர்களாகிய உங்களுக்குத் தான் புரிய வைக்கின்றார். எப்போதும் பிராமணர்கள் மூலமாகத் தான் வேள்வி நடக்கிறது. அந்த கீதையை கூறுபவர்கள் பிராமணர்கள் கிடையாது. ஆகவே, அது வேள்வியும் கிடையாது. இதுவோ எல்லையற்ற தந்தையால் படைக்கப்பட்ட மிகப் பெரிய வேள்வியாகும். எப்போதிலிருந்து பெரிய பெரிய தவலைகளை சமைத்து வைத்து வந்தனர். இது வரை பண்டாரா (யக்ஞம்) பெருமளவில் நடந்துக் கொண்டு தான் இருக்கிறது. எப்போது முடியும். முழு இராஜ்யமும் ஸ்தாபனை ஆகும் போது தான். உங்களைத் திரும்ப வீட்டிற்கு அழைத்துப் போவேன். பிறகு வரிசைக் கிரமத்தில் நடிப்பதற்காக அனுப்புவேன் என்று பாபா கூறுகின்றார். நான் உங்களுடைய வழிகாட்டி, உங்களை உடன் அழைத்துச் செல்கிறேன் என்று வேறு யாரும் கூற முடியாது. அழுக்கான மனிதர்களை தூய்மையாக மாற்றி அழைத்துச் செல்கிறார். பிறகு அவரவர் தர்மம் உருவாகும் நேரத்தில் நடிப்பதற்காக ஆத்மாக்கள் வர ஆரம்பிக்கின்றனர். இப்போது பல தர்மங்கள் இருக்கின்றது, மீதம் ஒரு தர்மம் மட்டும் இல்லை. அனைத்து சாஸ்திரங்களுக்கும் தாயாக விளங்குவது கீதை ஆகும். ஏனென்றால், அதிலிருந்து தான் அனைவருக்கும் கதி சத்கதி கிடைக்கிறது. பாரதவாசிகளிலும் யார் முதன் முதலில் பரமாத்மாவை விட்டு பிரிந்தனரோ அவர்களே ஞானத்தைப் பெறுகிறார்கள். முதன் முதலில் அவர்கள் வர ஆரம்பிப்பார்கள். பிறகு வரிசைக் கிரமத்தில் அனைவரும் வர வேண்டும். சதோ ரஜோ தமோவை அனைவரும் கடக்க வேண்டும். இப்போது கல்பத்தின் ஆயுள் முடிவடைந்துவிட்டது. அனைத்து ஆத்மாக்களும் ஆஜராகி இருக்கின்றனர். பாபாவும் வந்து விட்டார். ஒவ்வொருவரும் அவரவர் நடிப்பை நடிக்க வேண்டும். நாடகத்தில் அனைத்து நடிகர்களும் மேடையில் ஒன்றாக வருவதில்லை. அவரவர் நேரத்தில் வருகிறார்கள். வரிசைக் கிரமத்தில் எப்படி வருகிறார் என்று பாபா புரிய வைத்திருக்கிறார். வர்ணங்களைப் பற்றிய இரகசியத்தைப் பற்றியும் புரிய வைத்திருக்கிறார். குடுமி பிராமணர் களுக்குத் தான். ஆனால் பிராமணர்களையும் படைப்பவர் யார்? சூத்திரர்கள் படைக்க

மாட்டார்கள். குடுமிக்கு மேலே பிராமணர்களின் தந்தை பிரம்மா ஆவார். பிறகு பிரம்மாவின் தந்தை சிவபாபா ஆவார். எனவே, நீங்களே சிவ வம்சத்தின் பிரம்மா வாய் வழி வம்சத்தினர் ஆவீர்கள். நீங்கள் பிராமணரிலிருந்து மீண்டும் தேவதையாவீர்கள். வர்ணங்களைப் பற்றிய கணக்கைப் புரிய வைக்க வேண்டும். குழந்தைகளுக்கு ஆலோசனை அளிக்கப்படுகிறது. அனைவரும் ஒன்று போல புத்திசாலிகள் கிடையாது. யாராவது புதியவர்கள் முன்பு வித்வான், பண்டிதர்கள் வந்து விவாதம் செய்தால் அவர்கள் புரிய வைக்க முடியாது. அப்படி வரும் போது நான் புதியவன், தாங்கள் இந்த நேரத்தில் வந்தால் எங்களுடைய பெரிய சகோதரி தங்களுக்கு புரிய வைப்பார், என்னை விட கூர்மையானவர் என கூற வேண்டும். வகுப்பில் வரிசைக் கிரமத்தில் இருக்கிறார்கள். இதில் தேக உணர்வு வரக் கூடாது. இல்லை எனில், மரியாதை போய்விடும். பி.கே முழுமையாக புரிய வைக்க மாட்டார்கள் என கூறுவார்கள். தேக அபிமானத்தை விட்டு விட்டு பெரியவர்களிடம் தெளிவு படுத்திக் கொள்ள வேண்டும். நாங்கள் மேலே கேட்போம் என்று பாபா கூட கூறுகிறார் அல்லவா? மகாரதி, குதிரைப்படை என்று இருக்கிறார்கள் அல்லவா! சிலரோ சிங்கத்தின் மீதும் சவாரி செய்கிறார்கள். சிங்கம் எல்லோரையும் விட பலமானது. காட்டில் தனியாக இருக்கிறது. யானை எப்போதும் கூட்டமாக தான் இருக்கிறது. தனியாக இருந்தால் யாராவது கொன்று விடுவார்கள். சக்திகளை சிங்கத்தின் மீது சவாரி செய்வது போன்று காண்பிக்கிறார்கள்.

கீதையின் பகவான் கிருஷ்ணர் என்று கூறுவது தவறாகும் என்று குழந்தைகளுக்குப் புரிய வைக்கப் பட்டிருக்கிறது. கிருஷ்ணரின் சாஸ்திரத்தை அனைத்து தர்மத்தினரும் ஏற்க மாட்டார்கள். பழமையான தேவி தேவதா தர்மத்தை யார் ஸ்தாபனை செய்தது என்பதைத் தெளிவு படுத்தி கூற வேண்டும். அவர்களை தேவி தேவதை என்கிறார்கள். ஈஸ்வரன் தனியாவார். லஷ்மி நாராயணனை பகவான் பகவதி என்கிறார்கள். அவர்கள் பாலனைக்கு நிமித்தமாக இருக்கிறார்கள். ஒரு வேளை லஷ்மி நாராயணனை பகவான் பகவதி என்று கூறினால் விஷ்ணு, சங்கரரையும் பகவான் என்று கூற வேண்டும். பகவானைத் தவிர கீதையை யாரும் சொல்ல முடியாது என நீங்கள் அறிகிறீர்கள். பகவானின் வாயிலிருந்து பாடப்பட்டது தான் கீதையாகும். ஸ்ரீ ஸ்ரீ ருத்ரனின் கீதையாகும். இவரை யாரும் தன்னுடைய வாயாக மாற்றிக் கொள்ள முடியாது. சிவபாபாவைத் தவிர வேறு யாருடைய வாயிலிருந்தும் கீதை வர முடியாது. கீதை தாயாகும். அதை படைப்பவர் சிவபாபா. அவர் வந்து வாய் மூலமாகப் புரிய வைக்கிறார். அவர் ஞானக்கடல் அல்லவா? எனவே படைப்பவர் தான் படைப்பின் ஞானத்தைக் கொடுப்பார். ஆகையால் ரிஷி முனிகள் கூட முடிவற்றவர் என்கிறார்கள். ஈஸ்வரனின் வழியை ஈஸ்வரன் தான் அறிவார். இப்போது ஈஸ்வரனின் வழியே ஸ்ரீமத் ஆகும். இதன் மூலம் சத்கதி கிடைக்கிறது. இது சரியாகும். கதி(முக்தி) என்பதனுடன் சத்கதி இரண்டும் கூற வேண்டியிருக்கிறது. ஏனென்றால் பாரதத்தில் எப்போது சொர்க்கம் இருந்ததோ அப்போது மற்ற தர்மத்தினர் முக்தியில் இருந்தனர். பாரதவாசிகள் சத்கதி என்றால் ஜீவன் முக்தியில் இருக்கின்றார்கள். இந்த இரகசியங்கள் அனைத்தையும் பாபா புரிய வைக்கின்றார். அதை கடை பிடிக்க வேண்டும். பக்தி மார்க்கத்தினர் வேத சாஸ்திரங்கள் போன்றவைகளால் ஈஸ்வரனின் வழி கிடைக்கிறது என்று கூறுகிறார்கள். ஆனால் அவ்வாறு கிடையாது. இது என்ன சிம்லாவின் மலையா? யார் எங்கிருந்து சென்றாலும் போய் சேர்ந்து விடலாம்

என்பதற்கு. இங்கே பிரிய தர்ஷன் பிரிய தர்ஷினிகளிடம் வர வேண்டும். பிரிய தர்ஷினிகளை சொர்க்கத்திற்கு அதிபதியாக்குவதற்காக அலங்காரம் செய்ய வேண்டும். அனைவரும் மகாராஜா மகாராணி ஆக விரும்புகிறார்கள். ஆனால் தங்களது முகத்தைப் பார்த்துக் கொள்ளுங்கள் என பாபா கூறுகிறார். நாரதரின் விஷயமோ இச்சமயத்தினுடையதாகும். அவர் லஷ்மியை மணக்க விரும்பினார். முதலில் உன்னுடைய முகத்தை பார்த்துக் கொள் என அவருக்குக் கூறப்பட்டது. பாபாவும் தங்களது இதயம் என்ற கண்ணாடியில் பாருங்கள் என்கிறார். காமத்தின் பூதம் எதுவும் இல்லையா? சோதித்துக் கொண்டே இருங்கள். மேலும் பூதங்களை விரட்டுவதற்காக முயற்சி செய்யுங்கள். பாபா யுக்திகள் அனைத்தையும் தெரிவித்துக் கொண்டி ருக்கிறார். மனதில் நிறைய சங்கல்பம் வரலாம். கர்மத்தில் வரக் கூடாது. பாபா நல்ல கர்மங்களைக் கற்பிக்கிறார் அல்லவா? கர்மம்-அகர்மம்-விகர்மத்தின் விளைவுகளின் ஞானம் கீதையில் இருக்கிறது. வேறு யாரும் அறியவில்லை. விகர்மத்தைச் செய்விப்பது மாயை ஆகும். அது சத்யுகத்தில் இருக்காது. இப்போது ஸ்ரீமத் படி நடப்பதால் தான் நீங்கள் சொர்க்கத்திற்கு செல்ல முடியும். இது எந்த ஒரு மனிதனின் வழியும் கிடையாது. பாபாவின் ஸ்ரீமத்தினால் சொர்க்கம் உருவாகிக் கொண்டிருக்கிறது. மற்றவர்களின் வழியினால் சொர்க்கவாசி ஆக முடியாது. இன்னும் கீழானவர்களாக மாறி விடுவோம்.

இப்போது ஒரு தர்மம் ஸ்தாபனை ஆகிக் கொண்டிருக்கிறது என குழந்தைகள் அறிகிறீர்கள். நீங்கள் யோக பலத்தினால் குப்த வேடத்தில் தனது இராஜ்யத்தை உருவாக்கிக் கொண்டிருக்கிறீர்கள். கைகளில் ஆயுதங்கள் போன்ற எதுவும் இல்லை. ஞானத்தின் அம்பு போன்றவை இருக்கின்றது. அவர்கள் ஸ்தூலத்தில் காண்பித்து விட்டனர். இது அனைத்தும் குப்த சக்தியாகும். சக்திகளுக்கு எவ்வளவு பூஜைகள் நடக்கின்றன பாருங்கள். 10-20 புஜங்களை உடையவர்கள் யாரும் கிடையாது. அனைவருக்கும் இரண்டு புஜங்கள் தான் உள்ளன. மனித சிருஷ்டியில் 8-10 புஜங்களை உடையவர்கள் யாரும் கிடையாது. சூட்சும வதனத்தில் விஷ்ணுவிற்கு நான்கு புஜங்களைக் காண்பிக்கிறார்கள். அது பொருளுடன் இருக்கின்றது. விதையை புரிந்துக் கொள்வதால் முழு மரத்தின் ஞானமும் வந்து விடுகிறது.

நல்லது. ஞானத்தின் பொக்கிஷம் குழந்தைகளுக்குக் கிடைத்துக் கொண்டிருக்கிறது. பிறகு வாயை இனிப்பாக்குவதற்காக குழந்தைகளுக்கு டோலியை ஊட்டுகின்றார்கள். சிவபாபா தான் சாப்பிடுவதில்லை. அனைத்தும் குழந்தைகளுக்காக. இராஜ்யமும் குழந்தைகளுக்காக. லஷ்மி நாராயணன் கூட நிச்சயமாக தங்களது குழந்தைகளுக்கு கொடுப்பார்கள். ஆனாலும் அனைவருக் கும் பகிர்ந்து கொடுக்க மாட்டார்கள். ஆனால் இந்த பாபா அனைத்து குழந்தைகளுக்கும் கொடுக் கிறார். அங்கே பிரஜைகள் கூட நாங்கள் சொர்க்கத்திற்கு அதிபதி என்கிறார்கள். சுகம் பிரஜை களுக்கும் இருக்கிறது. துக்கத்தின் பெயர் கிடையாது. மற்றபடி வரிசைக் கிரமத்தில் இருக்கிறார்கள். அங்கு தங்கம் கூட அளவற்று இருக்கிறது. இங்கேயோ அனைத்து சுரங்கங்களும் காலியாகி விட்டன. யார் மண்ணில் புதைத்து வைத்திருக்கிறார்களோ அது மண்ணோடும், சிலருடையதை இராஜாக்களும் சாப்பிடுவர்... என பாடப்பட்டிருக்கிறது. நல்லது.

இனிமையிலும் இனிமையான காணாமல் போய் கண்டெடுக்கப்பட்ட செல்லமான

குழந்தைகளுக்கு, தாயும் தந்தையுமாகிய பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம். தாய்மார்களுக்கு வந்தே மாதரம். குழந்தைகளுக்கு அன்பு நினைவுகள் மற்றும் அனைவருக்கும் குட்மார்னிங். இப்போது இரவு முடிவடைகிறது. குட்மார்னிங் வந்துக் கொண்டிருக்கிறது. பிரம்மா குமார், பிரம்மா குமாரிகளுக்கான புதிய யுகம் வந்துக் கொண்டிருக்கிறது. நல்லது.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1. தேக உணர்வை விட்டு விட்டு தன்னைவிட பெரியவர்களை முன்னுக்கு வைக்க வேண்டும். யாராவது விவாதம் செய்கிறார்கள் என்றால், பெரியவர்களிடம் தெளிவு படுத்த வேண்டும். மரியாதையை இழக்கக் கூடாது.

2. தானம் வீட்டிலிருந்து ஆரம்பிக்கிறது. முதலில் குடும்பத்திற்கு நன்மை செய்ய வேண்டும். குடும்ப விவகாரத்தில் இருந்துக் கொண்டே தாமரை மலருக்குச் சமமாக தூய்மையாக மாற வேண்டும்.

வரதானம்: தேக அகங்காரம் அல்லது அபிமானத்தின் சூட்சும அம்சத்தையும் தியாகம் செய்யக் கூடிய ஆகாரி மற்றும் நிராகாரி ஆகுக.

சிலருக்கு மேலோட்டமான முறையில் தேகத்தின் மீது பற்று அல்லது அபிமானம் இல்லாமல் இருக்கிறது. ஆனால் தேக சம்பந்தங்களில், தனது சன்ஸ்காரம் விசேஷமாக இருக்கிறது, புத்தி விசேஷமாக இருக்கிறது, குணம் விசேஷமாக இருக்கிறது, கலைகள் விசேஷமாக இருக்கிறது, சில சக்திகள் விசேஷமாக இருக்கிறது - இவைகளின் அபிமானம் அதாவது அகங்காரம், போதை, கோபம் இருப்பது - இது கூட சூட்சும அபிமானம் ஆகும். ஆக இந்த அபிமானம் ஒருபோதும் ஆகாரி பரிஸ்தா அல்லது நிராகாரி ஆக விடாது. ஆகையால் இவைகளின் அம்சத்தையும் தியாகம் செய்யுங்கள், அப்போது தான் எளிதாக ஆகாரி மற்றும் நிராகாரி ஆக முடியும்.

சுலோகன்: சரியான நேரத்தில் சகயோகிகளாக ஆகும் போது பல மடங்கு கைமாறு கிடைத்து விடும்.